**10.01.2020**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ பொங்கல் கலைவிழா இன்று (10.01.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தஞ்சையில் உள்ள தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளோடு ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழா நேற்று (09.01.2020) சைதாப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் சிறப்பாக நடைப்பெற்றது.

இதனை தொடர்ந்து, இன்று (10.01.2020) சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழாவில்

1. மாலை 5.45 மணிக்கு கேரள மாநிலம் பையனூரைச் சேர்ந்த திரு.சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக்களி மற்றும் ஒப்பனா நடன நிகழ்ச்சியும்,
2. மாலை 6.30 மணிக்கு கர்நாடக மாநிலம் சிமோகாவைச் சேர்ந்த திரு.பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடன நிகழ்ச்சியும்
3. இரவு 7.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.செல்வம் குழுவினரின் தப்பாட்டம் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து சென்னை மெட்ரோ பொங்கல் கலைவிழாவை கண்டு களித்தனர்.

இதனை தொடர்ந்து, மெட்ரோ பொங்கல் கலைவிழா நாளை (11.01.2020) திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ இரயில் பயணியர், பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் அனைவரையும் இப்பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.